# சங்கக் கால கட்டிடக் கலை ஆய்வுப் புதுமைகள்

*முனைவர் அ. மாலதி*
உதவிப் பேராசிரியர், தலைவர் (பொறுப்பு), தமிழ்த்துறை
புதுவைப் பல்கலைக்கழகச் சமுதாயக் கல்லூரி
https://doi.org/10.5281/zenodo.15323819

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப்பதிவுகள் என்ற தலைப்பில் சங்ககால தமிழர்களின் கட்டடக் கலையின் சிறப்பினைப் பற்றி இக்கட்டுரை தெளிவாக விளக்குகின்றது. தொன்மையும் பெருமையும் வாய்ந்த தம் இலக்கியங்கள் வழி தமிழன் சிறப்பானதொரு பாதுகாப்பான கட்டடக்கலையை தன்னுடைய நிரந்தரமான வாழ்க்கைக்கு அமைத்து கொண்ட நுட்பங்களைப் பற்றி இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. நுண்ணோக்கு அறிவியல் திறத்துடன் நூலறிப்புலவர்கள் மூலம் கட்டடக்கலைகளை அமைத்தனர் என்ற செய்தினையும் தகுந்த இலக்கிய சான்றுகளுடன் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஓப்பற்ற கட்டடங்களில் ஓவியச் சிற்பங்களையும், பருவகாலத்திற்கேற்றவாறு கட்டடங்களைக் கட்டி மனமகிழ்வோடு வாழ்க்கையை ரசித்து வாழ்ந்தனர் என்பதும், மக்களின் நலனுக்காகவும் மக்கள் தங்கள் குடும்பத்துடனும் சுற்றத்தாரோடும் நீண்ட ஆயுள், செல்வச் செழிப்போடு பாதுகாப்பாக வாழ வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் கட்டடங்களை அமைத்திருந்தனர். அதுமட்டுமன்று மக்களுக்கு தேவையான அத்தனை கட்டிடங்களும் தமிழர்கள் நன்முறையில் பயன்படுத்தி பாதுகாக்கும் வகையில் குறிப்புகளையும் தந்து சென்றுள்ளனர் என்ற செய்தியானது தொல் தமிழர்களின் பரந்த மனபான்மையையும், அறப்பண்பையும், தமிழர்களின் பண்பாட்டினையும் இக்கட்டுரை தெள்ளத் தெளிவாக விளக்குகின்றது.*

**முன்னுரை**

*மனிதகுல வரலாறு கற்கருவிகளைப் பயன்படுத்தி படிப்படியாக அவனுடைய வளர்ச்சியானது நாகரிகப் பாதையை நோக்கி முன்னேற தொடங்கிய காலத்தில் இருந்தே அவனுள் இருந்த கலையும், பண்பாடும் அவனுள்ளேவளரத்தொடங்கியது. தனக்கான இருப்பிடத்தைத் தானே அமைத்துக்கொள்ள முனைந்தபோது, அவனின் நாகரிகம் முகிழ்க்கத் தொடங்கியது. மனிதன் சேர்ந்து வாழவும், பாதுகாப்பிற்கும், தலைமுறையை வளர்த்துக் கொள்வதற்கும் தம்முடைய உடைமைகளைப் பாதுகாக்கவும் இருப்பிடம் என்ற ஒன்று தேவைப்பட்டது. அந்த இருப்பிடம் என்பது தற்காலத் தேவையாக மட்டும் இராமல் எதிர்கால தலைமுறையினருக்கும் அது வாழ்விடமாக அமைத்தல் வேண்டி இயற்கையின் இடர்பாடுகளை களையும் வகையில் அறிவியல் சிந்தனையுடனும், நுண்ணோக்கு திறனுடனும், பாதுகாப்பாக திகழவும், சிறந்ததொரு கலை வடிவமான கட்டிடக்கலையை பயன்படுத்தி நிலையான தொரு குடியிருப்பைக் கட்டினான். மனிதனின் மரபு அறிவு வளர்ச்சியே கட்டடக்கலை நுட்பங்களாகப் பின்னாளில் வளர்ந்தது. இக்கட்டுரையில் பழந்தமிழர்களின் கட்டிடக்கலைச் சிறப்புகளைப் பற்றி தெளிவாக எடுத்தியம்புகின்றது.*

**பண்பாடு**

*பண்டைய இலக்கியங்களில பண்பாடு என்ற சொல் காணப்படவில்லை. வையாபுரிப் பிள்ளையின் கருத்துப்படி முதன் முதலாக*

பண்பாடு என்ற சொல்லை 1937இல் டி.கே.சி. தான் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார் எனக் கூறுகிறார். பண்பாடு என்பது மனிதனுடைய அறிவுக் கூறுகளில் ஒன்று. அது மனிதனின் வளர்ந்த நிலையைக் காட்டுவதோடு சமுதாயத்தின் படிநிலையும் காட்டுகின்றது. அ.தட்சிணாமூர்த்தி தமது நுலில் ஓர் இனத்தின் பண்பாட்டை அறிய அதன் இலக்கியம், மொழி, கலை, குறிக்கோள், சமயக்கொள்கை, அரசியல், வரலாறு, சமுதாயநிலை, பெண்களின் நிலை, அறிவியற்சிறப்பு, கல்விநிலை இவைகளின் மூலம் விளக்கலாம் எனக் கூறுகிறார்.

**கட்டிடக்கலை**

பழந்தமிழ்ப் பாடல்களில் தமிழர் தங்கி வாழ்ந்த இடங்கள், அகம், இல், இல்லம், உறையுள், உறைவிடம், கல்லளை, குடில், குரம்பை, குறும்பு, நெடுநகர், புக்கில், மனை, மாடம் எனப்பலவாறு குறிக்கப்படுகின்றன. தமிழர் வகுத்த அறுபத்து நான்கு கலைகளுள் கட்டடக் கலையும் ஒன்று. "சிற்பத்தொழில்" என்பதனைக் கலை ஞானம் அறுபத்து நான்கின் ஒன்று எனக்குறிப்பிட்டு "இல்லமெடுத்தல் கோயில் முதலியனக் கட்டுஞ் சாத்திரம்" என மதுரைத் தமிழ்ப் பேரகராதி விளக்குகிறது. செதுக்குவேலை, கல்வேலை, கற்சிற்பவேலை என இதற்கு விரிவும் கூறப்படுகிறது. இத்தொழில் செய்வோரைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று கண்ணுள் வினைஞர் என்பது இயற்கைப் பொருள்களாலான திணைசார் இருப்பிடங்களில் தொடங்கும் தமிழரின் கட்டடக் கலை நுட்பங்களானது அடிப்படைத் தேவைக்கான உறையுள் என்பதோடு நின்றுவிடாமல், எழில்மிகு அரண்மனைகள், உயிர்மாளிகைகள், எழுநிலை மாடங்கள் அகல் நெடுந்தெருக்கள், வடிவார்ந்த ஊர்கள், திட்டமிட்ட பெருநகரங்கள், வளம்மிகு பட்டினங்கள், உறுதியான கோட்டைகள், ஏற்றமிகு அரண்கள், பயன்மிகு நீர்நிலைகள், விண்ணளக்கும் கலங்கரை விளக்கங்கள், கலைகள், வளர்க்கும் அரங்குகள், ஆன்மீகம் வளர்க்கும் கோயில்கள் எனப் பரந்துபட்டவையாகும்.

மனைவகுப்பதற்கென்று தனி இலக்கண நூல் இருந்ததையும், அந்நூலில் தேர்ச்சிப் பெற்ற வல்லுநர்களைக் கொண்டு கட்டடங்கள் அமைக்கப் பட்டதையும் அறியமுடிகின்றது. இந்நூலினைக் கற்று, கட்டடக்கலைத் துறையில் தேர்ச்சிப் பெற்ற வல்லுநர்களை "நூலறிபுலவர்" என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. நுலறிசிறப்பின் வல்லுநர்கள் சிறந்த முறையிலே கட்டிய, உயர்ந்த மாடத்தினை,

***கால மன்றியு நூலோர் சிறப்பின்***
***முகிறோய் மாடத்தில் (சிலம்பு, 14:97-98)***

என்ற அடிகள் காட்டுகின்றன.

**குடியிருப்புகள்**

தெருக்களின் இருபுறங்களிலும் பெரிய பெரிய இல்லங்கள் பல்வகைப் பயன்பாட்டுடன் கூடிய தொழில் நுட்பத்துடன் எழுப்பட்டிருந்தன. வானை முட்டும் படியான உயர்ந்த நல்ல இடங்களில், ஆங்காங்கே காற்றோட்டத்திற்கான சாளரங்கள் அமைத்துக் கட்டப்பட்டிருந்தன. (மதுரைக் 356-358) அதேபோல, செம்பினால் செய்யப்பட்டது போன்ற தன்மையைக் கொண்ட நெடிய சுவர் அமைந்திருப்பதையும், அச்சுவரில் வடிவழகையுடைய பல பூக்களையுடைய ஒப்பற்ற பூங்கொடியை ஓவியமாய் வளர்ந்திருந்ததையும்,

***செம்பு இயன்றன்ன செய்வு உறுநெடுஞ் சுவர்***
***உருவிப்பல் பூ ஒருகொடி வளைஇ***
***கருவொடு பெயரிய காண்பின் நல் இல்***
***(நெடுநல் 112-114)***

என்ற அடிகள் காட்டுகின்றன.

**பருவ நிலைக்கு ஏற்ற தளங்கள்**

பலமாடிக் கட்டடங்களையும், பருவநிலைக்கு ஏற்ப உறையும் தளங்களையும் (வேனிற் காலத்திற்கான சிறப்பு வடிவமைப்பு)

***வான் உற நிவந்த மேல் நிலை மருங்கின்***
***வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்***
***(நெடுநல். 60-63)***

என்ற அடிகள் காட்டுகின்றன. அதேபோல,

*தனக்குள்ள இடமெல்லாம் பொன்னாலும், மணியாலும் சிறப்புப்பெற்று, உயர்ந்த ஏழுநிலையினையுடைய மாடத்தினை, இடஞ்சிறந்து உயரிய எழுநிலை மாடத்து (முல்லை. 86) என்பதில் காணமுடிகிறது. மேலும் வானை அளக்கும் மாளிகையையும், அதில் உள்ள நிலா முற்றத்தில் பெண்கள் பந்து விளையாடுதலையும்,*

***வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇ***

***(பெரும்பாண்.333)***

*என்பதிலும், நகரில் மாடங்கள் மிக உயரமானதாகவும், மலைகளின் கூட்டத்தைப் போன்று நெருக்கமானதாகவும் அமைக்கப்பட்டிருந்ததை,*

***மலைக்கணத் தன்னமாடம் சிலம்ப***

***(புறம். 390:7)***

*என்பதிலும், உயர்ந்த மணியைவிட அதிகமாக ஒளிவீசும் மாடத்தினை, கதிர்விடுமணியிற் கண்பொரு மாடம் (புறம். 532) என்பதிலும் காணமுடிகிறது.*

**நகர்**

*நகர் என்னும் சொல் இருப்பிட வகையில் மிகவும் வளமான இருப்பிடத்தையும், நகரத்தையும் குறித்து நிற்கிறது. "முரசு முழங்கு நெடுநகர்" (பதி.12) 'உருகெழு நெடுநகர்' (பதி.88) "வரை குயின்றன்ன வான்தோய் நெடுநகர்" (அகம்.93) "விண் பொரு நெடுநகர்" (அகம்.167) "நெல்லுடை நெடுநகர்" (அகம்.176; புறம். 287) "மலைபுரை நெடுநகர்" (அகம்.296) "வெண்மணல் நிவந்த பொலங்கடை, நெடுநகர் (அகம்.325) "பொன்னுடை நெடுநகர்" (அகம்.385) ஆகிய குறிப்புகள், நெடுநகரான இல்லங்களின் அமைப்பையும், இயல்பையும் விளக்கி நிற்கின்றன.*

**பெருநகரின் கட்டமைப்பு**

*பெருநகரின் கட்டுமான அமைப்பானது. பாதுகாப்பு, போக்குவரத்து, செய்தொழில் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதாக அமைக்கப்பட்டிருந்தது. நகரின் உள்ளமைப்பு, அரசன் இருக்கையை நடுவாகக் கொண்டு, அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நாற்பெருங்குடிமக்கள், வீதிகளுடனும், போர் மறவர், கொல்லர், குயவர் முதலிய பல்வேறு தொழில் புரியும் மக்கள் வாழும் இல்லங்களின் வீதிகளுடனும் முறையாக அமைந்திருந்தது. இந்த அமைப்பு தாமரைப்பூவின் நடுவிலுள்ள கொட்டையை அடுத்து இதழ்கள் அமைந்திருப்பதைப் போல உள்ளது என்று மதுரை நகரையும், கச்சி நகரையும் புலவர் காட்டுவர்.*

***மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்***
***பூவோடு புரையும் சீர் ஊர் பூவின்***
***இதழகந்து அனைய தெருவம் அண்ணல் கோயில்***
***தாதின் அனையர் நன்தமிழ்க் குடிகள்***

***(பரி.8:1-5)***

*என மதுரைப் பெருநகரின் கட்டமைப்பும்,*

***நீல நிற உருவின் நெடியோன் கொப்பூழ் நான்முக***
***ஒருவற் பயந்த பல் இதழ்த்***

***(பெரும்.402-411)***

*என்று கச்சிமாநகரின் கட்டமைப்பும் காட்சிப்படுத்தப்படுகின்றன. இவற்றிலிருந்து பழந்தமிழரின் கட்டுமானத் தொழில் நுட்பத்தினையும், நகர் உருவாக்கத்தில் திட்டமிட்ட தொலைநோக்கையும் அறிய முடிகிறது.*

**முடிவுரை**

*பழந்தமிழர்கள் ஆயக்கலைகளிலும் சிறந்தவராக விளங்கினர். அக்கலைகளின் வழியே பண்பாட்டையும், கலைநுட்பங்களையும் வெளிபடுத்தினர் என்று கூறினால் மிகையாகாது. அதில் ஒன்று தான் இந்த கட்டடக்கலை வளர்ச்சியாகும். தமிழர்கள் இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதிலும், கட்டடக்கலையில் தொழில்நுட்பங்களைக் கையாளுவதிலும் கைதேர்ந்தவர்களாக விளங்கியதை இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. அவ்வகையில் குடியிருப்புகள், மாடங்கள், நகர், பெருநகர், சுகாதார வசதி, அரங்கு, பாதுகாப்பு அரண்கள், செம்புப் புரிசை, கலங்கரை விளக்கம், எந்திரம் பொருந்திய அரண்கள், கட்டுமானப் பொருள்கள், செங்கல், கருங்கல், பளிங்குக்கற்கள், ஓடுகள் மற்றும்*

*உலோகத் தகடுகள் பொருத்தப்பட்ட கட்டடங்களை திறம்படவும் செம்மையாகவும் அமைத்து இன்று வரை அவர்களின் கட்டடக்கலைக்கு உதாரணமாக பலகோயில்கள் அரண்மனைகள் செம்மாந்து நிற்பதைக் காணலாம். அன்றைய தமிழர்கள் தம்முடைய மக்கள் மனமகிழ்ச்சியோடும், பாதுகாப்பாகவும் வாழ்வதற்காக பல வகை கட்டட சாத்திர முறைப்படி கட்டடங்களை அமைத்தனர். ஆனால் இன்றோ பண ஆசைக்காக கட்டடக்கலையை வெறும் வியாபாரமாக தரமில்லாத கட்டடங்களை அமைத்து நாளடைவில் குறுகிய காலத்திலே அக்கட்டடங்கள் இடிந்து பல உயிர்கள் அழிவதை மனிதாபிமானம் இல்லாமல் கண்டு ரசிக்கின்றார். அக்கால தமிழர்கள் மக்கள் நலனுக்காக வாழ்ந்தனர். இக்கால தமிழர்களோ தமிழர்களின் நலனுக்காக வாழாமல், வெறும் சுயநலத்திற்காக வாழ்ந்து வருகின்றனர். இந்நிலை தொடர்ந்தால் நிச்சயமாக பேரழிவை அவர்கள் சந்திப்பது திண்ணம், இனியாவது மனசாட்சியோடு வாழ்ந்து நம் தலைமுறைகளின் அழிவை தடுத்து, இச்சிறப்பான இக்கட்டடக்கலையை உண்மையாகவும், நேர்மையாகவும் படைத்து தரமானதொரு கட்டடக்கலையை உலகுக்கு அளிப்போமாக!*

**துணைநூற்பட்டியல்**


1. *தமிழர் கலைகள் ஆய்வுக் கட்டுரைகள் - பதிப்பாசிரியர் - செம்மூதாய் சதாசிவம், முனைவர் க.சாகயராஜா பேரா.ப.நடராஜன் பேரா.வீ.லெஷ்மி பதிப்பகம் - செம்மூதாய் பதிப்பகம் ஏ 3 அபிராமி நி வாஸ் கிழக்குத் தாம்பரம், சென்னை. முதற்பதிப்பு மார்ச் 2016*
2. *பழந்தமிழர் வாழ்வியலும் பன்முக ஆளுமையும் - ஆசிரியர் - முனைவர் ஆ.மணவழகன்முதற்பதிப்பு:நவம்பர்2022 பதிப்பகம்: அய்யனார் பதிப்பகம்,எண்.32 சென்னை*
3. *பழந்தமிழர் தொழில் நுட்பம் ஆசிரியர் - முனைவர் ஆ.மணவழகன் அய்யனர், பதிப்பகம் முதற்பதிப்பு: அக்டோபர் 2010*